# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032

தொலைபேசி 044–22201337

மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in


**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)**

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்**:153/மா/**2025**

**நாள்: 23.07.2025**

| | |
|---|---|
| திரு.T.R. ஸ்ரீநிவாசன்<br>சென்னை 91 | மனுதாரர் |
| மண்டல அலுவலர் மண்டலம் 14<br>பெரு நகர சென்னை மாநகராட்சி | எதிர் மனுதாரர் |

சென்னை 91, புழுதிவாக்கம், பாலாஜி நகர், 23வது தெரு, மனை எண் 86, கதவு எண் 3/2 என்கிற முகவரியில் வசிக்கும் திரு.T.R.ஸ்ரீநிவாசன் என்பவரின் 24.04.2025 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 24.04.2025 அன்று பெறப்பட்டு 153/மா/2025 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

சென்னை 91, புழுதிவாக்கம், பாலாஜி நகர், 23வது தெரு, மனை எண் 86, கதவு எண் 3/2 என்கிற முகவரியில் வசிக்கும் திரு.T.R. ஸ்ரீநிவாசன் என்பவர் 24.04.2025 நாளிட்ட தனது மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்.

> “சென்னை பெருநகர மாநகராட்சி மண்டலம் 14 வார்டு 186 புழுதிவாக்கம் (வியாச வித்யாலயா பள்ளி) பாலாஜி நகர், 18வது தெரு கடைசி மற்றும் 21வது தெரு கடைசி (Two Places Dead End) பருவ மழைக்காலத்தில் பாலாஜி நகர் 18, 19,20,21,23, 24 வது தெருக்களில் தேங்கும் மழை வெள்ளத்தை, மேற்கண்ட பகுதிக்கு அருகில் உள்ள வீராங்கல் ஓடையின் மூலம் வெளியேற்றுவதற்கான சென்சார் கருவியுடன் கூடிய அதிக திறன் கொண்ட தானியங்கி நீர் இறைக்கும் மோட்டார் அமைத்து மின் இணைப்பு பெற்று நிரந்தரமாக பம்ப் ரூம் கட்டுமானம் வருகின்ற 2025 பருவ மழைக்கு முன்னர் அமைத்திடக்கோரி மாநகராட்சி ஆணையர் மற்றும் தலைமையிட மழைநீர்வடிகால் துறை அதிகாரிகள், வட்டார துணை ஆணையர் மண்டலம் 14ன் மாநகராட்சி அதிகாரிகளிடம் 27.03.2025ல் மனு அளிக்கப்பட்டது. பெருநகர சென்னை மாநகராட்சி தலைமையிடம் கண்காணிப்பு பொறியாளர், மழைநீர் வடிகால்துறை, சென்னை 3 அவர்கள் ம.நீ.வ.து.ந.க.எண் அ4/1003/2025 நாள் 11.04.2025 பதில் வழங்கினார். அதில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகள் மற்றும் பராமரிப்பு பணிகள் மண்டலம் 14ன் மூலம் மேற்கொள்ளப்படுவதால் இம் மனு மேல்நடவடிக்கைக்காக மண்டலம் 14க்கு

அனுப்பப்படுகிறது. மேலும் எடுக்கப்படும் நடவடிக்கையினை மனுதாருக்கும் மற்றும் மழைநீர்வடிகால் துறைக்கும் தெரிவிக்குமாறும் தெரிவித்துள்ளார்.

மண்டலம் 14, வார்டு 186, புழுதிவாக்கம், பாலாஜி நகர் 18, 19, 20, 21, 22, 23, 24வது தெருக்கள் வீராங்கல் ஓடையை ஒட்டி உள்ள பகுதிகளாகும். இப்பகுதியில் சுமார் 500க்கு மேற்பட்ட குடும்பங்கள் வசிக்கின்றனர். வீராங்கல் ஓடையை ஒட்டி உள்ள மேற்குறிப்பிட்டுள்ள தெருக்களில் முக்கியமாக 20, 21, 22, 23வது தெருக்களில் ஒவ்வொரு ஆண்டின் பருவமழைக் காலங்களில் மழை வெள்ளம் சுமார் மூன்றுஅடி வரை சாலையில் தேங்கி நிற்கும். வீடுகளுக்குள் மழைநீர் புகுந்து மிகுந்த பொருட்சேதங்கள், பாதிப்புகள் உண்டாகும்.

கடந்த 2023 ஆண்டில் தேங்கிய மழைநீரை பகுதி 14ன் குடிநீர்வாரியம் தனது வாகனங்கள் மூலம் இரைத்து அகற்றியது. 2024 பருவ மழைக்காலத்தில் தேங்கிய வெள்ளநீரை மண்டலம்14ன் மாநகராட்சி அதிகாரிகள் மோட்டார் பெருத்தப்பட்ட விவசாய டிராக்டர்களை கொண்டு மழைநீரை இறைத்து வீராங்கல் ஓடையின் மூலமாக வெளியேற்றினர்.

சென்னை பெருநகர மாநகராட்சி மண்டலம் 14ல் மார்ச் 12.03.2025 நடைபெற்ற மாதாந்திர வார்டு கமிட்டி கூட்டத்தில் வார்டு 186ன் மாமன்ற உறுப்பினர் திரு J.K. மணிகண்டன் அவர்கள் 2025 பருவமழைக்கு முன்னர் மேற்குறிப்பிட்ட பகுதியில் வீராங்கல் ஓடை புதிதாக கட்டப்பட்ட வெள்ள தடுப்பு சுவர் அருகில் சென்சார் கருவி இயக்கத்துடன் கூடிய அதிக திறன் கொண்ட நீர் இரைக்கும் மோட்டார் பொருத்தி பாலாஜி நகர் பகுதியில் தேங்கும் வெள்ள நீரை பம்பிங் செய்து வெளியேற்றிட பம்ப் ரூம் கட்டுவது குறித்து எடுத்துரைத்து பேசி பொருள் சார்ந்து அதனை நிறைவேற்றிட வார்டு கமிட்டி கூட்டத்தில் பேசி உள்ளார். ஆனால் மண்டலம் 14ன் மாநகராட்சி அதிகாரிகள் அதனை நிறைவேற்றுவது சார்ந்து கள ஆய்வு பணிகள், திட்ட பணிகள், திட்ட மதிப்பீடு தயாரித்தல் போன்ற எந்த பணிகளையும் இதுவரை மேற்கொள்ளவில்லை.

மேற்கண்ட புழுதிவாக்கம் வார்டு 186 பாலாஜி நகர் 18, 19, 20, 21, 22, 23, 24வது தெருக்களில் 2025 பருவ மழைக் காலங்களில் மழைநீர் வீடுகளுக்குள் புகுந்து பொருட்சேதங்கள், உயிர்சேதங்கள் ஏற்படாத வகையில் இத்தெருக்களில் வசிக்கும் சுமார் 500 குடும்பங்கள் 2025 பருவ மழைக்கும் பாதிக்கப்படாத வண்ணம் அரசும் மாநகராட்சி அதிகாரிகளும் பருவ மழைக்கு முன்பு சென்சார் கருவியுடன் அதிக திறன் கொண்ட தானியங்கி நீர் இறைக்கும் மோட்டார் வைத்திடவும் பம்ப் ரூம் கட்டுமானம் அமைத்திடவும் பாலாஜி நகரில் மேற்கண்ட தெருக்களில் மழைநீர் தேங்காமல் நீரை வெளியேற்ற மோட்டரை இயக்கத்திற்கும் மக்கள் பயன்பாட்டிற்கும் கொண்டு வர மண்டலம் 14ன் அடுத்து வரும் மாதாந்திர வார்டு குழு கூட்டத்தில் இதனைபொருளாக வைத்து தீர்மானம் நிறைவேற்றி பணிகளை 2025 பருவ மழைக்கு முன் நிறைவேற்றிட பெரு மதிப்பிற்குரிய தமிழ்நாடு உள்ளாட்சி முறை மன்ற நடுவர் அவர்கள் எனது இந்த மனுவினை கருணையுடன் பரிசீலனை செய்து விசாரணைக்கு ஏற்று விசாரணை தேதி அளித்து விசாரணை செய்து வருகின்ற 2025 பருவ மழைக்கு முன்பு மனுவில் குறிப்பிட்டுள்ள இரு இடங்களில் மழைக்காலங்களில் மேற்குறிப்பிட்டுள்ள தெருக்களில் தண்ணீர் தேங்காத வகையில் மண்டலம்14ன் மாநகராட்சி அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து செயல்படுத்திட உதவி புரியுமாறும், உரிய ஆணை பிறப்பித்து உத்தரவு வழங்கிடுமாறும் பணிந்து வணங்கி வேண்டுகிறேன்” என்று தெரிவித்துள்ளார்.

2. மனுதாரர் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு இம் முறைமன்ற நடுவ 14.5.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14ன் மண்டல அலுவலரிடம் கோரப்பட்டது.

3. பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14ன் மண்டல அலுவலர் கடிதம் ம.அ.14 ந.க. எண் அ10/4080/2025 நாள் 01.07.2025–ன் அறிக்கையில் பின்வருமாறு தெரிவித்துள்ளார்.

"மனுதாரர் குறிப்பிட்டுள்ள பகுதியில் மழைக்காலங்களில் அதிகப்படியான மழைநீர் தேங்கும்போது உடனடியாக பெருநகர சென்னை மாநகராட்சி மூலமாக நீர் இறைக்கும் இயந்திரங்கள் மூலமாக மழைநீர் வெளியேற்றப்படும் எனத் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது."

4. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சிகள் அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 03.07.2025 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 23.06.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் 03.07.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

"சென்னை பெருநகர மாநகராட்சி, மண்டலம் 14, வார்டு 186ல் புழுதிவாக்கம் (வியாச வித்யாலயா பள்ளி) பாலாஜி நகர் 18வது தெரு கடைசி மற்றும் 21வது தெரு கடைசி (Two Places Dead End) பருவ மழைக்காலத்தில் பாலாஜி நகர் 18, 19, 20, 21, 23, மற்றும் 24வது தெருக்களில் தேங்கும் மழை வெள்ளத்தை மேற்கண்ட பகுதிக்கு அருகில் உள்ள வீராங்கல் ஓடையின் மூலம் வெளியேற்றுவதற்கான சென்சார் கருவியுடன் கூடிய அதிக திறன் கொண்ட தானியங்கி நீர் இறைக்கும் மோட்டார் அமைத்து மின் இணைப்பு பெற்று நிரந்தரமாக பம்ப் ரூம் கட்டுமானம் வருகின்ற 2025 பருவமழைக்கு முன்னர் அமைத்திட கோரப்பட்டது.

மேற்கண்ட பொருள் தொடர்பாக பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14ன் வார்டு கமிட்டி கூட்டத்தில் இரண்டு மாதங்களுக்கு முன்பு தீர்மானம் நிறைவேற்றப்பட்டும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

மேற்கண்ட புழுதிவாக்கம் வார்டு 186 பாலாஜி நகர் 18, 19, 20, 21, 23, மற்றும் 24வது தெருக்களில் 2025 பருவ மழைக்காலங்களில் மழைநீர் வீடுகளுக்குள் புகுந்து விடுவதால் அதனை தடுக்கும் வகையிலும் இத்தெருக்களில் வசிக்கும் சுமார் 500 குடும்பங்கள் 2025 பருவ மழைக்கும் பாதிக்கப்படாத வண்ணம் அரசும், மாநகராட்சி அதிகாரிகளும் பருவ மழைக்கு முன்பு சென்சார் கருவியுடன் அதிக திறன் கொண்ட தானியாங்கி நீர் இறைக்கும் மோட்டார் பாலாஜி நகர் 18, 21, 23வது தெருக்களில், அதிக திறன் கொண்ட தானியங்கி நீர் மோட்டார் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என மாண்புமிகு மேயர்அவர்களுக்கு மண்டல அலுவலர் ம.அ.14.ந.க.எண்.அ3/2479/2025 நாள் 30.04.2025ன் கடிதப்படி வைத்திடவும் பம்ப் ரூம் கட்டுமானம் அமைத்திடவும், பாலாஜி நகரில் மேற்கண்ட தெருக்களில் மழைநீர் தேங்காமல் நீரை வெளியேற்ற பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14ன் மண்டல அலுவலருக்கு உரிய உத்திரவிடுமாறு இம்முறைமன்ற நடுவர் அவர்களை பணிவுடன் வேண்டிக் கொள்கிறேன்."

6. பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்14ன் உதவிப்பொறியாளர் 03.07.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

"மனுதாரர் குறிப்பிட்டுள்ள பகுதியில் மழைக்காலங்களில் அதிகப்படியான மழைநீர் தேங்கும் போது ஒவ்வொரு வருடமும் மோட்டார் இறைக்கும் இயந்திரம் வைத்து நீர் வெளியேற்றப்படுகிறது. மேலும் நிரந்தர தீர்வாக பம்பு ரூம் கட்டுமானத்திற்கு திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, வரும் வார்டு கமிட்டி கூட்டத்தில் வைக்கப்பட்டு ஒப்புதல் பெறப்பட்ட பின் உரிய நடவடிக்கை எடுக்கப்படும். பெருநகர சென்னை மாநகராட்சி மூலமாக நீர் இறைக்கும் இயந்திரங்கள் மூலமாக மழைநீர் இவ்வருடமும் மழைநீர் வெளியேற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்."

7. மனுதாரரின் மனு, வாக்குமூலம், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14ன் மண்டல அலுவலரின் அறிக்கை, மற்றும் உதவிப் பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 14, வார்டு 186ல் புழுதிவாக்கம் (வியாச வித்யாலயா பள்ளி) பாலாஜி நகர் 18வது தெரு கடைசி மற்றும் 21வது தெரு கடைசி (Two Places Dead End) பருவ மழைக்காலத்தில் பாலாஜி நகர் 18, 19, 20, 21, 23, மற்றும் 24வது தெருக்களில் தேங்கும் மழை வெள்ளத்தை மேற்கண்ட பகுதிக்கு அருகில் உள்ள வீராங்கல் ஓடையின் மூலம் வெளியேற்றுவதற்கான சென்சார் கருவியுடன் கூடிய அதிக திறன் கொண்ட தானியங்கி நீர் இறைக்கும் மோட்டார் அமைத்து மின் இணைப்பு பெற்று நிரந்தரமாக பம்ப் ரூம் கட்டுமானம் வருகின்ற 2025 பருவமழைக்கு முன்னர் அமைத்திட கோரப்பட்டது எனவும், இது குறித்து மண்டலம் 14ன் வார்டு கமிட்டி கூட்டத்தில் இரண்டு மாதங்களுக்கு முன்பு தீர்மானம் நிறைவேற்றப்பட்டும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனவும், மேற்கண்ட தெருக்களில் மழைநீர் வீடுகளுக்குள் புகுந்து விடுவதால் அதனை தடுக்கும் வகையில், இவ்வருட பருவ மழைக்கு முன்னர் சென்சார் கருவியுடன் அதிக திறன் கொண்ட தானியங்கி நீர் இறைக்கும் மோட்டார் அமைக்கவும், பம்ப் ரூம் கட்டுமானம் அமைத்திடவும் கோரியிருப்பது மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

மனுதாரர் குறிப்பிட்டுள்ள பகுதியில் மழைக்காலங்களில் அதிகப்படியான மழைநீர் தேங்கும் போது ஒவ்வொரு வருடமும் மோட்டார் இறைக்கும் இயந்திரம் வைத்து நீர் வெளியேற்றப்படுகிறது என்பதும், மேலும் நிரந்தர தீர்வாக பம்ப் ரூம் கட்டுமானத்திற்கு திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, வரும் வார்டு கமிட்டி கூட்டத்தில் வைக்கப்பட்டு ஒப்புதல் பெறப்பட்ட பின் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14ன் மண்டல அலுவலரின் அறிக்கை மற்றும் உதவிப் பொறியாளரின் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், மனுதாரர் குறிப்பிட்டுள்ள வார்டு 186 புழுதிவாக்கம் பாலாஜி நகரில் பம்ப் ரூம் கட்டுமானத்திற்கு திட்ட மதிப்பீடு தயார் செய்து, வார்டு கமிட்டி கூட்டத்தில் ஒப்புதல் பெறப்பட்டவுடன் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்14ன் மண்டல அலுவலர் தன்னுடைய அறிக்கையிலும், உதவிப்பொறியாளர் தன்னுடைய

வாக்குமூலத்திலும் தெரிவித்தவாறு, உரிய நடவடிக்கை எடுக்குமாறு பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14ன் மண்டல அலுவலருக்கு உத்திரவிடுமாறு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்றம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

2025–ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 23–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாளை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு. T.R. ஸ்ரீநிவாசன்,
மனை என் 86, கதவு எண் 3/2,
பாலாஜி நகர், 23வது தெரு,
புழுதிவாக்கம்,
சென்னை 91.

(2) ஆணையர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை,
சென்னை 600 003.

(3) மண்டல அலுவலர்,
மண்டலம் 14,
பெருநகர சென்னை மாநகராட்சி,
எண் 6/64 புழுதிவாக்கம் பிரதான சாலை,,
சென்னை 600 091.

(4) கண்காணிப்பாளர்,
மழைநீர் வடிகால் துறை,
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை,
சென்னை 600003.

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ / உதிரிகள்.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

செயலாளர்.